**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், திருவாரூர்**
**(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்)**
**முன்னிலை : திருமதி.Dr.R. லதா, M.A., M.L., Ph.D.,**
**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் வியாழன் கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், ஆடித்திங்கள் 21–ஆம் நாள்**

**மோ.வா.வி.இ.கோ.மனு எண்.61/2023**
**(CNR No. TNTV02-000662-2023)**

1. சாந்தகுமாரி,
   க/பெ. மணிகண்டன்,
   பழைய எண்.99, புதிய எண்.208,
   காந்தி சாலை,
   விஜயாபுரம்,
   திருவாரூர் டவுன்,
   திருவாரூர் மாவட்டம்.
2. மைனர். ஜெயக்கண்ணன்,
   த/பெ. மணிகண்டன்,
   பழைய எண்.99, புதிய எண்.208,
   காந்தி சாலை,
   விஜயாபுரம்,
   திருவாரூர் டவுன்,
   திருவாரூர் மாவட்டம்.
3. மைனர். தீபக்கண்ணன்,
   த/பெ. மணிகண்டன்,
   பழைய எண்.99, புதிய எண்.208,
   காந்தி சாலை,
   விஜயாபுரம்,
   திருவாரூர் டவுன்,
   திருவாரூர் மாவட்டம்.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:06:34 +0530

4. லலிதா,
க/பெ. ஜெயகுமார்,
பழைய எண்.99, புதிய எண்.208,
காந்தி சாலை,
விஜயாபுரம்,
திருவாரூர் டவுன்,
திருவாரூர் மாவட்டம்.

(2 மற்றும் 3-ம் இளவர் மனுதாரர்களுக்காக அவர்களது தாயாருமான காப்பாளருமான 1-ம் மனுதாரர் சாந்தகுமாரி மூலமாக)

............. ***மனுதாரர்கள்***

-எதிர்-

1. முரளி,
த/பெ. கலியபெருமாள்,
80 மேற்குக்தெரு,
மருங்கூர்,
கீழக்கோட்டை,
பன்ரூட்டி.
2. மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்,
3/137, சாலமேடு, வாழுத்தரெட்டி அஞ்சல்,
விழுப்புரம் மாவட்டம்.
3. எம். பாலாஜி,
த/பெ. மணவாளன்,
35 ஜி, சேனம்மன் கோவில்,
கைலாச முதலி தெரு,
தொண்டியார்பேட்டை, சென்னை.
4. எம். துளசிராமன்,
த/பெ. மோகன்,
768, பஜன்னி கோவில் தெரு,
பெருமாள்பட்டு,

LATHA Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:06:39 +0530

திருவள்ளூர் மாவட்டம்.

5. கிளை மேலாளர்,
யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கோ லிட்.,
153, முதல் தளம், JN சாலை,
ஹரிராம் நகர்,
பெரியக்குப்பம்,
திருவாரூர்.

**.....எதிர்மனுதாரர்கள்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Tr.CMP.No.264 முதல் 281/2020 மனுக்களில்11/05/2020 தேதியில் பிறப்பித்த தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் உத்தரவு படிவம்:**

| | | | |
|---|---|---|---|
| (a) | இழப்பீடு கோருபவர்களின் பெயர் மற்றும் முகவரி | | 1. சாந்தகுமாரி,<br>க/பெ. மணிகண்டன்,<br>பழைய எண்.99, புதிய எண்.208,<br>காந்தி சாலை,<br>விஜயாபுரம்,<br>திருவாரூர் டவுன்,<br>திருவாரூர் மாவட்டம்.<br>2. மைனர். ஜெயக்கண்ணன்,<br>த/பெ. மணிகண்டன்,<br>பழைய எண்.99, புதிய எண்.208,<br>காந்தி சாலை,<br>விஜயாபுரம்,<br>திருவாரூர் டவுன்,<br>திருவாரூர் மாவட்டம்.<br>3. மைனர். தீபக்கண்ணன்,<br>த/பெ. மணிகண்டன்,<br>பழைய எண்.99, புதிய எண்.208,<br>காந்தி சாலை,<br>விஜயாபுரம், |

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:06:48 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | திருவாரூர் டவுன்,<br>திருவாரூர் மாவட்டம்.<br>4. லலிதா,<br>க/பெ. ஜெயகுமார்,<br>பழைய எண்.99, புதிய எண்.208,<br>காந்தி சாலை,<br>விஜயாபுரம்,<br>திருவாரூர் டவுன்,<br>திருவாரூர் மாவட்டம். |
| (b) | எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | | 1. முரளி,<br>த/பெ. கலியபெருமாள்,<br>80 மேற்குக்தெரு,<br>மருங்கூர்,<br>கீழக்கோட்டை,<br>பன்ருட்டி,<br>2. மேலாண் இயக்குநர்,<br>தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்,<br>3/137, சாலமேடு, வாழுத்தரெட்டி அஞ்சல்,<br>விழுப்புரம் மாவட்டம்.<br>3. எம். பாலாஜி,<br>த/பெ. மணவாளன்,<br>35 ஜி, சேனம்மன் கோவில்,<br>கைலாச முதலி தெரு,<br>தொண்டியார்பேட்டை, சென்னை.<br>4. எம். துளசிராமன்,<br>த/பெ. மோகன்,<br>768, பஜன்னி கோவில் தெரு,<br>பெருமாள்பட்டு,<br>திருவள்ளூர் மாவட்டம்.<br>5. கிளை மேலாளர், |

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:06:53 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | யுனைடெட் இந்தியா<br>இன்சூரன்ஸ் கோ லிட்.,<br>153, முதல் தளம், JN சாலை,<br>ஹரிராம் நகர்,<br>பெரியக்குப்பம்,<br>திருவாரூர். |
| (c) | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி | – | 25.01.2023 |
| (d) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | – | 06.08.2026 |
| (e) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் | – | ரூ.56,90,000/– |
| (f) | வட்டி விகிதம் | – | 7.5% |
| (g) | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் | – | 25.01.2023 |
| (h) | செலவுத்தொகை ஏதாவது இருப்பின் | | 1) மனு/வழக்குரை நீ.ம. — 56,272.50<br>2) வக்காலத்து — 10.00<br>3) படி மெமோ — 22.50<br>4) வழக்கறிஞர் கட்டணம் — 63,900.00<br>5) மொத்தம் — 1,20,205.00 |
| (i) | உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | | மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.56,90,000/–ஐ** 2ம் எதிர்மனுதாரரும் மற்றும் 3, 4 ஆம் எதிர்மனுதாரர்களுக்காக அந்த வாகன காப்பீடுதாரரான 5ம் எதிர்மனுதாரர் |

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:06:57 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | சரிபாதி தொகையை அதற்குரிய வட்டியுடன் சேர்த்து இழப்பீடாக மனுதாரர்களுக்கு வழங்கவேண்டும் |
| j) | மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம் | – | 1ம் மனுதாரருக்கு **ரூ.21,90,000/–மும்,** மேற்படி முழுதொகைக்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் சேர்த்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. **4ம்** மனுதாரருக்கு ரூ.**5,00,000/– ம்** (ஐந்து இலட்சம் மட்டும்) பெற்றுக்கொள்ளவும், 2 மற்றும் 3ம் மனுதாரர்கள் இளவர்களாக இருப்பதால் வங்கியில் வைப்பீடாக அவர்களது பங்களிப்பு இழப்பீட்டுத்தொகையான தலா **ரூ.15,00,000/– (கூடுதல் ரூ.30,00,000/–)** முழுவதையும் ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், 2 மற்றும் 3ம் இளவர்களின் பராமரிப்பு செலவிற்கு பணம் தேவைப்படும் பட்சத்தில் அதற்குரிய வட்டி தொகையை மட்டும் அவருடைய தாயாரும், பாதுகாவலருமான 1ம் மனுதாரர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும், இளவர்கள் உரிய வயதினை அடைந்தவுடன் அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. |
| (k) | இழப்பீட்டு தொகை எதன் மூலமாக எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது | | மனு தாக்கலான தேதியிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் சேர்த்து ஒரு மாத |

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:07:03 +0530

| | | | |
|---|---|---|---|
| | சம்பந்தமான விபரம் | | காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் கணக்கு எண்.CJMTVR612023TNSTC, IFSC. SBIN0004266 – ஐ மாறுதல் மூலம் 2ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தும், ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் கணக்கு எண்.CJMTVR612023UIIC, IFSC.SBIN0004266 – ஐ மாறுதல் மூலம் 5ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தும் நீதிமன்ற Email ID. tvr.cjm-tn@indiancourts.nic.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. |
| (I) | இழப்பீட்டு தொகை மனுதாரர்கள் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விவரம் | | 1ம் மனுதாரருக்கு **ரூ.21,90,000/-**மும், மேற்படி முழுதொகைக்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் சேர்த்து இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம். **4**ம் மனுதாரருக்கு ரூ.**5,00,000/- ம்** (ஐந்து இலட்சம் மட்டும்)இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம். 2 மற்றும் 3ம் மனுதாரர்கள் இளவர்களாக இருப்பதால் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட அவர்களது பங்களிப்பு இழப்பீட்டுத்தொகையான தலா ரூ.15,00,000/- (கூடுதல் ரூ.30,00,000/-) முழுவதையும் ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் |

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:07:09 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், 2 மற்றும் 3ம் இளவர்களின் பராமரிப்பு செலவிற்கு பணம் தேவைப்படும் பட்சத்தில் அதற்குரிய வட்டி தொகையை மட்டும் அவருடைய தாயாரும், பாதுகாவலருமான 1ம் மனுதாரர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும், இளவர்கள் உரிய வயதினை அடைந்தவுடன் அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. |
| (m) | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையாளருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின் | – | இல்லை. |
| (n) | இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | – | ரூ.375.00 |
| (o) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் | – | ரூ.55,897.50/– |
| (p) | திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம் | – | இல்லை. |

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:07:15 +0530

இம்மனு கடந்த 25.01.2023 ஆம் தேதியன்று திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 02.02.2023 அன்று M.C.O.P.No.09/2023 என்ற எண்ணில் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்பு இம்மனுவானது உ.வி.மு.ச.பிரிவு 24ன்கீழ் இந்நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு 07.02.2023 அன்று இந்நீதிமன்றத்தால் M.C.O.P.No.61/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக 01.08.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.D.மணிவண்ணன், அவர்கள் ஆஜராகியும், 1, 3, 4 எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினர்களாக அறிவிக்கப்பட்டும், 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திருV.ஸ்டாலின் அவர்கள் ஆஜராகியும், 5 எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.T.P.S.மணிக்கண்ணன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், இம்மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும், இன்று (06.08.2026)இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது மோட்டார் வாகன சட்டப்பிரிவுகள் 140 M.V. Act 1988 ன் கீழ் கடந்த 08.07.2022ம் ஆம் தேதி 1-ம் மனுதாரரின் கணவர் விபத்தில் ஏற்பட்ட கொடுங்காயங்களினால் இறந்ததற்கு இழப்பீட்டு தொகையாக ரூ60,00,000/- மனு தாக்கல் செய்த நாள் முதல் உரிய வட்டியுடன் எதிர்மனுதாரர்கள் செலுத்தும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் தாக்கல்

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:07:20 +0530

செய்யப்பட்டுள்ளது.

1) **மனுவின் சுருக்கம் :–**

(i) இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன மணிகண்டன் கடந்த 08.07.2022 அன்று பணிக்கு செல்வதற்காக சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு செல்லும் TN–32–N–3884 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தில் பயணித்துக் கொண்டிருக்கும்போது GST சாலை சென்னை – திண்டிவனம் மார்க்கம், கடமலைப்புத்தூரை தாண்டி போலம்மாள்குளம் சந்திப்பில் இருந்து சுமார் 450 மீட்டர் தொலைவில் திண்டிவனம் மார்க்கமாக உள்ள சாலையில் இரும்பு கம்பி லோடு ஏற்றி சென்ற TN–12–AQ–9669 என்ற பதிவெண் கொண்ட டிரைய்லர் லாரி பின்னால் மணிகண்டன் பயணித்து சென்ற அரசு பஸ் மோதி விபத்து ஏற்பட்டதில் மணிகண்டன் உட்பட 3 ஆண்களும், 2 பெண்களும் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டனர்.

(ii) மேற்படி விபத்தானது TN–12–AQ–9669 என்ற பதிவெண் கொண்ட டிரைய்லர் லாரியை ஓட்டிவந்த ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஹாரன் அடிக்காமலும் அதிவேகமாக ஓட்டிச்சென்று சாலையில் நிறுத்தியதால், அதன்பின்னே வந்த மணிகண்டன் பயணம் செய்த TN–32–N–3884 என்ற பதிவெண் கொண்ட அரசுப் பேருந்தின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து சாலையில் நின்ற லாரியின் மீது மோதி இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:07:30 +0530

(iii) மேற்படி விபத்து குறித்து அரசுப்பேருந்து ஓட்டுநருக்கு எதிராக செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் காவல் நிலையத்தில், குற்ற எண்.230/2022, இதச பிரிவு 304(A)ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(iv) விபத்தில் இறந்த மணிகண்டன் விபத்து சமயம் Shri Ganesh Interior (P) Ltd –ல், Electrical & Electronic Engineer ஆக வேலை பார்த்து மாதம் ரூ.30,000/– சம்பாதித்து வந்துள்ளார். மேற்படி விபத்தின் காரணமாக தனது கணவரை இழந்ததால் எவ்வித வருமானமுமின்றி மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

(v) மேற்படி 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–32–N–3884 என்ற பதிவெண் கொண்ட அரசுப்பேருந்தை 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாக ஓட்டியதாலும், 4ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–12–AQ–9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரியை 3ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாக ஓட்டியதாலும் விபத்து ஏற்பட்டுள்ளதால், அந்த டிரெய்லர் லாரி 5ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு அமலில் இருந்து வருவதால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் விதமாக ரூ.60,00,000/– ஐ எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ கொடுக்க உத்தரவிடவேண்டி இந்த மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:07:34 +0530

**2) 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**

(i) மனுதாரர்கள் தாக்கல் செய்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை என்றும், 2ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் விபத்து நடைபெறவில்லை என்றும் இந்த 2ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கும் மேற்படி விபத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் மேற்படி விபத்திற்கு TN 12 AQ 9669 என்ற பதிவெண் கொண்ட டிரைய்லர் லாரி ஓட்டுநரே முழு பொறுப்புடையவர் என்றும் மனுதாரர்கள் கோரிய நஷ்ட ஈடு தொகையை 2ஆம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றும், எனவே, மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் இந்த எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) **5–ம் எதிர்மனுதாரரின் எதிருரை சுருக்கம் :–**

(i) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு, சட்டப்படியும் சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவர்.

(ii) இந்த விபத்து குறித்து வாகனத்தின் உரிமையாளரான 4ம் எதிர்மனுதாரரிடமிருந்து காப்பீட்டு கோரிக்கை மனு, காப்பீட்டு பாலிசி, வாகனப் பதிவு சான்று, ஓட்டுநர் உரிமம் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில், இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:07:40 +0530

நிலுவையில் இருந்துள்ளது என்பது இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. மேலும், விபத்து சமயம் லாரி ஓட்டுநருக்கு செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இருந்து வந்துள்ளது என்பதும் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது.

(iii) விபத்து சமயம் 08.07.2022 அன்று காலை 8.15 மணியளவில் TN–12–AQ 9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரி சாலையின் இடதுபுறமாக இரும்புக் கம்பிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்தபோது TN–32–N–3884 என்ற பதிவெண் கொண்ட அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்து அதிவேகமாகவும் அலட்சியமாகவும் இயக்கப்பட்டு, லாரியின் வலது பின்புறத்தில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதால் இந்த விபத்திற்கு மேற்படி அரசுப்பேருந்தின் அதிவேகமும், அஜாக்கிரதையுமே காரணம் ஆகும்.

(iv) மேலும், இந்த விபத்து தொடர்பாக பேருந்து ஓட்டுநருக்கு எதிராக அச்சிறுப்பாக்கம் காவல் நிலையத்தில் குற்ற எண்.230/2022–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரர்களுக்கு இந்த எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.

(v) இறந்த நபரின் வயது, வருமானம் ஆகியவை மறுக்கப்படுகிறது. ஆகவே, மேற்படி காரணங்களின் அடிப்படையில் இம்மனுவை இந்த எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென இந்த எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:07:44 +0530

**4) <u>இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் :–</u>**

(1) இவ்விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

(2) மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார்களா?

(3) மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**5)** இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 விசாரிக்கப்பட்டு ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.10 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1, விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. (மேலும், இவ்வழக்கில் கடந்த 28.08.2024 தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின்படி 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் நடத்துநர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டிருந்தபோதும், அந்த தீர்ப்புரையானது ரத்து செய்யப்பட்ட பிறகு 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.)

**6)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7)** **<u>பிரச்சினை எண்.1ற்கான தீர்வு</u>**

**(1) இவ்விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது? என்ற பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுகையில்,**

(i) கடந்த 08.07.2022 அன்று இறந்துபோன மணிகண்டன் பணிக்கு செல்வதற்காக சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:07:50 +0530

செல்லும் TN 32 N 3884 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தில் பயணியாக பயணித்துக் கொண்டிருக்கும்போது GST சாலை சென்னை – திண்டிவனம் மார்க்கமாக உள்ள சாலையில் கடமலைப்புத்தூரை தாண்டி போலம்மாள்குளம் சந்திப்பில் இருந்து சுமார் 450 மீட்டர் தொலைவில் திண்டிவனம் மார்க்கமாக உள்ள சாலையில் இரும்பு கம்பி லோடு ஏற்றி சென்ற TN 12 AQ 9669 என்ற பதிவெண் கொண்ட டிரைய்லர் லாரியின் பின்னால் மணிகண்டன் பயணித்து சென்ற அரசு பஸ் மோதியதில் விபத்து நடந்தததாக ம.சா.ஆ.1 அரசு பேருந்து ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

(ii) இந்நிலையில், மனுதாரர் தரப்பில் தேசிய நெடுஞ்சாலையில் அதிவேகமாக சென்ற டிரெய்லர் லாரி பிரேக் அடித்ததால் அந்த விபத்து ஏற்பட்டது என்பதால் அரசுப்பேருந்தான 2ம் எதிர்மனுதாரரும், டிரெய்லர் லாரியின் ஓட்டுநரும் இந்த விபத்திற்கு காரணம் என்பதால் மனுதாரர்களுக்கு 1 முதல் 5 எதிர்மனுதாரர்களும் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என வாதிடப்பட்டது.

இதனடிப்படையில் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில்,

> **"திண்டிவனம் நோக்கி TN 12 AQ 9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரி இரும்பு கம்பி லோடுடன் ரோட்டின் இடது ஓரமாக நின்று கொண்டிருந்தது. அதன் அருகில் சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு சென்று**

LATHA Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:07:55 +0530

**கொண்டிருந்த TN 32 N 3884 என்ற அரசுப்பேருந்து லாரியின் வலதுபுறம் மோதி பேருந்தின் இடதுபுறம் முழுவதும் முற்றிலும் சேதமடைந்து இருந்தது."**

என கிராம நிர்வாக அலுவலர் குறிப்பிட்டபோதும், அதே முதல் விசாரணையில் அதன் தொடர்ச்சியாக

**" சம்பவ இடத்தில் விசாரித்தபோது இன்று 08.07.2022 ம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில் ரோட்டில் இரும்புலோடு ஏற்றிக்கொண்டு இடதுபுறமாக சென்றுகொண்டிருந்த லாரியின் பின்னால் அரசுப்பேருந்தை ஓட்டிவந்த டிரைவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மோதியதில் விபத்து ஏற்பட்டது என தெரியவந்தது."**

என குறிப்பிட்டுள்ளவகையில், இரும்பு கம்பி லோடு ஏற்றிக்கொண்டு சென்றுகொண்டிருந்த டிரெய்லர் லாரியின் வலதுபுறம் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

(iii) மேலும், பரிசீலனை செய்கையில், மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள கண்ணுற்ற சாட்சியான ம.சா.2 தனது முதல் விசாரணையில்,

**"அவரது வாகனத்திற்கு முன்பாக அரசுப்பேருந்தும், அரசுப்பேருந்திற்கு முன்பாக லாரியும் சென்றுகொண்டிருந்தபோது லாரி திடீரென பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டதாக"**

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:01 +0530

குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

(iv) இதனை குறித்து 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோதும், அதனை வேறு சாட்சியங்கள் கொண்டு மறுத்து நிரூபிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை அரசுபேருந்து ஓட்டுநருக்கு எதிராக பதிவு செய்து இருப்பதாலேயே இந்த விபத்திற்கு அரசு பேருந்து காரணம் என எடுத்துக்கொள்ளமுடியாது.

(v) இதன் அடிப்படையில் ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை பரிசீலனை செய்கையில், விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனத்திலும் இயந்திரகோளாறுகள் எதுவும் ஏற்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும், சாட்சிய விசாரணையில் தேசிய நெடுஞ்சாலையில் இருவாகனங்களும் சென்று கொண்டிருந்தபோது தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்பது நிரூபணமாகிறது. இந்நிலையில், தேசிய நெடுஞ்சாலையில் நின்றுகொண்டிருந்த டிரெய்லர் லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட எ.ம.சா.1 தனது முதல் விசாரணையில், பத்தி 5இல்

> **"எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள TN 12 AQ 9669 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் லாரியை அதன் ஓட்டுநர் உரிய சமிக்ஞையுடன் இடதுபுற ஓரமாகதான் நிறுத்தியுள்ளார்."**

என குறிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், தனது குறுக்கு விசாரணையில், லாரி பழுது ஏற்படவில்லை என்றும், அது ஓரமாக சர்வீஸ் சாலையில் நிறுத்தப்பட்டிருந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:06 +0530

(vi) ஆனால், முதல் தகவல் அறிக்கையிலேயே சென்று கொண்டிருந்த லாரியின்மீது பேருந்து மோதியுள்ளது என குறிப்பிட்டுள்ளதாலும், அதனை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள ம.சா.2 ன் சாட்சியமும் உறுதிசெய்யும் வகையிலேயே சாட்சி அளித்துள்ளதாலும், இரும்பு கம்பிகளை ஏற்றிச்சென்ற லாரி தக்க சமிக்ஞையுடன் நிறுத்தப்பட்டிருந்ததாக 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையான எ.ம.சா.ஆ.1 விசாரணை அறிக்கையில் நிரூபிக்கவில்லை என்பதாலும், மேற்படி எதிர்மனுதாரர் தரப்பு வாதமானது ஏற்ககூடியதாக இல்லை. அந்த வகையில், இந்த விபத்திற்கு 1, 3 எதிர்மனுதாரர்களான பேருந்து ஓட்டுநர் மற்றும் லாரி ஓட்டுநரின் கவனக்குறைவே விபத்திற்கு காரணம் என பிரச்சினை எண்.1ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**8) <u>பிரச்சினை எண் 2–ற்கான தீர்வு:</u>**

**(2) மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளார்களா?**

(i) மேற்கண்ட பிரச்சினை 1–ற்கான தீர்வின் அடிப்படையில், TN–32–N–3884 என்ற பதிவெண் கொண்ட SETC தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழக பயணிகள் பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் மற்றும் தேசிய நெடுஞ்சாலையில் எவ்வித சமிக்ஞையுமின்றி TN–12–AQ–9669 என்ற பதிவெண் கொண்ட இரும்பு கம்பிகள் வெளியில் நீட்டிக்கொண்டு இருந்ததே மேற்படி விபத்திற்கு காரணம் என்பதால் மேற்படி இரு வாகனங்களின் உரிமையாளர்களும்

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:11 +0530

மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்புடையவர்கள் ஆவர்கள்.

(ii) மேற்படி லாரி 5ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நடைமுறையில் உள்ளதால், 2ம் எதிர்மனுதாரரும் மற்றும் 5ம் எதிர்மனுதாரரும் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் என்று பிரச்சினை எண்.2ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

9) <u>பிரச்சினை எண் 3-ற்கான தீர்வு:-</u>

**(3) மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?**

இவ்வழக்கு விபத்தில் இறந்த மணிகண்டன் விபத்தின்போது நல்ல உடல் ஆரோக்கியத்துடன், திடகாத்திரத்துடனும், நல்ல சுறுசுறுப்புடனும் செயல்பட்டு Shri Ganesh Interior (P) Ltd -ல், Electrical & Electronic Engineer ஆக வேலை பார்த்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்தாக மனுவில் குறிப்பிட்ட போதும், ம.சா.ஆ.8 ஆவணத்தில் மாதம் ரூ.25,000/- கையில் சம்பளமாக பெற்றுள்ளார் என்பது தெரியவருவதால், அதையே அவருடைய மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) மேலும், ம.த.சா.ஆ.6 வாரிசு சான்றின் படி இறந்துபோன மணிகண்டனை சார்ந்து மனுதாரர்கள் நான்கு பேர்கள் உள்ளார்கள் என்பது தெரியவருகிறது. இது குறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம்,

***Sarala Varma and Others Vs. Delhi Transport Corporation and another, 2009 ACJ 1298,***

என்ற முன்தீர்ப்பின்படி இறந்துபோன மணிகண்டனை சார்ந்து நான்கு நபர்கள் இருப்பதால் அவருடைய மொத்த மாத வருமானமாக

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:21 +0530

இந்நீதிமன்றம் எடுத்துக்கொண்ட **ரூ.25,000/-** இல் நான்கில் ஒரு பகுதியான ரூ.6250/-ஐ கழித்தால் மீதமுள்ள **ரூ.18,750/-** அவருடைய மாத வருமானம் என்று கணக்கிடப்படுகிறது. மேலும் இறந்துபோன மணிகண்டன் நிரந்தர வேலை வாய்ப்பு பெற்றிருந்தார் என்பதற்கு ம.சா.ஆ.8 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எதிர்கால வருமான வாய்ப்பு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பான

***Sarala Varma and Others Vs. Delhi Transport Corporation and another, 2009 ACJ 1298 -ன்படி***

இறந்துபோன மணிகண்டன் என்பவர் நிரந்தர வேலையில் இருந்தார் என்பது நிரூபணமாவதாலும், விபத்து சமயத்தில் அவரது வயது 33 என ம.சா.ஆ.2ன் மூலம் தெரிய வருவதாலும், இறந்த நபருக்கு எதிர்கால வருமான வாய்ப்பு 50 சதவீதமாக கூடுதல் **ரூ.9,375/-** கிடைக்கத்தக்கது என மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பான,

**PREETHA KRISHNAN & ORS Vs United India Insurance Company ltd** -ன்படி இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11)** விபத்தில் இறந்துபோன மணிகண்டன் மாத சம்பளம் ரூ.28,125/-ஐ 12 ஆல் பெருக்கினால் **ரூ.3,37,500/-** என்றும், விபத்தில் இறந்துபோன மணிகண்டன் வயது 33 என்று ம.த.சா.ஆ.2ன் படி கணக்கிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **2009 ACJ 1298 Sarala Varma Vs. Delhi Transport Corporation and Others** என்ற வழக்கில் காட்டியுள்ள வழி

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:28 +0530

காட்டுதலின் அடிப்படையில் பெருக்கல் குறியீடு 16 என நிர்ணயம் செய்யப்பட்டு இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன மணிகண்டனுக்கு வயது 33 என்பதால் பெருக்கல் குறியீடு 16–ஐ ரூ.3,37,500/– ல் பெருக்கினால் ரூ.54,00,000/– வருமான இழப்பாக கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

1ம் மனுதாரர் அவருடைய முதல் விசாரணையில், விபத்தின் காரணமாக தனது கணவர் இறந்ததினால் தனது கணவர் மூலம் கிடைத்து வந்த அன்பு, பாசத்தை இழந்துவிட்டதாகவும், 2 மற்றும் 3ம் இளவர் மனுதாரர்கள் தங்களது தந்தையை இழந்து தந்தையின் மூலம் கிடைத்த அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்துவிட்டார் என்றும், 4ம் மனுதாரர் தனது மகனை இழந்து அவர் மூலம் கிடைத்த அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்துவிட்டார்கள் என்றும் கூறியுள்ளார்கள்.

எனவே, மனுதாரர்கள் அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்ததற்காக தலா **ரூ.25,000/–** (மொத்தம் ரூ.1,00,000/–) கிடைக்கத்தக்கது என்றும், இறந்துபோன மணிகண்டன் என்பவரின் ஈமக்கிரியை செலவிற்காக (Loss of Funeral expenses) **ரூ.15,000/–** கிடைக்கத்தக்கது என்றும், ஆஸ்தி இழப்பிற்காக (Loss of Estate) **ரூ.15,000/–**மும் தீர்வு கண்டு இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அத்துடன் 1ம் மனுதாரருக்கு தனது கணவரின் நல்லுறவை இழந்தமைக்காக **ரூ.40,000/–** (Loss of Consortium) வழங்கத்தக்கது என்றும், 2, 3 இளவர் மனுதாரர்கள் தங்களின் தகப்பனாரின் நல்லுறவை இழந்தமைக்காக (Parental Consortium) தலா **ரூ.40,000/–**

Digitally signed by LATHA
LATHA Date: 2026.08.06 18:08:33 +0530

மும், 4ம் மனுதாரர் அவரது மகனை (Filal Consortium) ரூ.40,000/—மும் கிடைக்கத்தக்கது இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**12)** மேற்படி கணக்குகளின் படி மொத்த இழப்பீடாக கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வருமான இழப்பு | ரூ. | 54,00,000/— |
| 2. | 1 முதல் 4 மனுதாரர்களுக்கு அன்பு, பாசம், அரவணைப்பு ஆகியவற்றை இழந்ததற்காக தலா ரூ.25,000/— வீதம் | ரூ. | 1,00,000/— |
| 3. | ஈமக்கிரியை செலவிற்காக | ரூ. | 15,000/— |
| 4. | ஆஸ்தி இழப்பிற்காக | ரூ. | 15,000/— |
| 5. | 1ம் மனுதாரர் தனது கணவரின் நல்லுறவு இழப்பிற்காக | ரூ. | 40,000/— |
| 6. | 2, 3 மனுதாரர்கள் அவர்களது தகப்பனாரின் நல்லுறவு இழப்பிற்காக | ரூ. | 80,000/— |
| 7. | 4ம் மனுதாரர் தனது மகனின் நல்லுறவு இழப்பிற்காக | ரூ. | 40,000/— |
| | **மொத்தம்** | **ரூ.** | **56,90,000/—** |

இறுதியில், மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

1) மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.56,90,000/—ஐ** 2ம் எதிர்மனுதாரரும் மற்றும் 3, 4 ஆம் எதிர்மனுதாரர்களுக்காக அந்த வாகன காப்பீடுதாரரான 5ம் எதிர்மனுதாரர் சரிபாதி தொகையை அதற்குரிய வட்டியுடன் சேர்த்து இழப்பீடாக மனுதாரர்களுக்கு வழங்கவேண்டுமென்றும், மனு தாக்கலான தேதியிலிருந்து தொகை செலுத்தும் தேதி வரை 7.5% வட்டியுடன் சேர்த்து ஒரு மாத

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:43 +0530

காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் **கணக்கு எண்.CJMTVR612023TNSTC, IFSC. SBIN0004266 – ஐ** மாறுதல் மூலம் 2ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தும், ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் **கணக்கு எண்.CJMTVR612023UIIC, IFSC.SBIN0004266 – ஐ** மாறுதல் மூலம் 5ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தும் நீதிமன்ற **Email ID. tvr.cjm-tn@indiancourts.nic.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி முழு தொகையை வட்டி, செலவுத்தொகையுடன் எம்.சி.ஓ.பி. 61/2023 தீர்ப்பாயத்தின் பெயரில் செலுத்தியவுடன் 1ம் மனுதாரருக்கு **ரூ.21,90,000/-மும்,** மேற்படி முழுதொகைக்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் சேர்த்து இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. **4**ம் மனுதாரருக்கு ரூ.**5,00,000/- ம்** (ஐந்து இலட்சம் மட்டும்) இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

3) 2 மற்றும் 3ம் மனுதாரர்கள் இளவர்களாக இருப்பதால் வங்கியில் வைப்பீடாக அவர்களது பங்களிப்பு இழப்பீட்டுத்தொகையான தலா **ரூ.15,00,000/- (கூடுதல் ரூ.30,00,000/-)** முழுவதையும் ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், 2 மற்றும் 3ம் இளவர்களின் பராமரிப்பு செலவிற்கு பணம் தேவைப்படும் பட்சத்தில் அதற்குரிய வட்டி தொகையை மட்டும்

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:49 +0530

அவருடைய தாயாரும், பாதுகாவலருமான 1ம் மனுதாரர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும், இளவர்கள் உரிய வயதினை அடைந்தவுடன் அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையினை பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டியது இருந்தால் அதை இன்றிலிருந்து 10 நாட்களுக்குள்செலுத்த வேண்டுமென்றும், மீதி நீதிமன்ற கட்டணம் செலுத்தும் வரையில் தீர்ப்பாணை தொகையை மனுதாரர் பெறத்தக்கவரல்ல என்று உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரர்களின் வழக்கறிஞர் கட்டணம் **ரூ.63,900/-** என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:53 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி/
தலைமை நீதித்துறை நடுவர்
திருவாரூர் .

**<u>I. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் –</u>**

ம.சா.1 -- திருமதி. சாந்தகுமாரி
ம.சா.2 -- திரு.வெங்கட்ராமன்

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:08:57 +0530

**I. மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| ம.த.சா.ஆ.1 | -- | 08.07.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை, அச்சரப்பாக்கம் காவல்நிலையம் உண்மை நகல் |
| ம.த.சா.ஆ.2 | -- | 09.07.2022 தேதியிட்ட இறப்பு அறிக்கை அசல் |
| ம.த.சா.ஆ.3 | -- | 09.07.2022 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை நகல் |
| ம.த.சா.ஆ.4 | -- | 09.07.2022 தேதியிட்ட M.V.Report TN-32-N-3884 TNSTC நகல் |
| ம.த.சா.ஆ.5 | -- | 09.07.2022 தேதியிட்ட M.V.Report TN-12-AQ-9669 Tralior Lorry நகல் |
| ம.த.சா.ஆ.6 | -- | 03.08.2022 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் நகல் |
| ம.த.சா.ஆ.7 | -- | மாற்று சான்றிதழ் - ADJ தர்மாம்பாள் பாலிடெக்னிக் நகல் |
| ம.த.சா.ஆ.8 | -- | 31.10.2022 தேதியிட்ட Shri Ganesh Interiors Salary Certificate அசல் |
| ம.த.சா.ஆ.9 | -- | 2021-2022 வருமான வரி சான்று கணினி நகல் |
| ம.த.சா.ஆ.10 | -- | 2022-2023 வருமான வரி சான்று கணினி நகல் |

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.08.06 18:09:01 +0530

**III. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

எ.ம.சா.1 – திரு. பெரெடிக்ஸ்

**IV. <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் –</u>**

எ.ம.சா.ஆ.1 –ஆராய்வாளர் அறிக்கையும் அதனுடன் இணைக்கப்பட்ட

ஆவணங்கள் – அசல்

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:09:04 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி/
தலைமை நீதித்துறை நடுவர்
திருவாரூர் .

LATHA Digitally signed by LATHA Date: 2026.08.06 18:09:08 +0530